**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 109** **நாள்: 15.08.2016**

**ரிப்பன் மாளிகை வளாகத்தில் இந்திய சுதந்திர தின விழா கொண்டாட்டம் !**

**மாண்புமிகு மேயர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார் !!**

**---------**

பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் இன்று (15.08.2016) இந்திய சுதந்திர தின விழாவினையொட்டி, தேசிய மாணவர்படை, சாரண, சாரணியர் அணிவகுப்பு, கலர் பார்ட்டி மற்றும் வாத்தியக்குழுக்களைப் பார்வையிட்டு, தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

அதன் தொடர்ச்சியாக தேசிய மாணவர் படை, சாரண, சாரணியர் மற்றும் வாத்தியக்குழுக்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

அடுத்ததாக, மாண்புமிகு மேயர் அவர்கள் சேத்துப்பட்டு இந்தியன் வங்கி மைக்ரோசெட்–1ல் ரூ.9.00 இலட்சத்திற்கான வங்கி கடன் இணைப்பை நொளம்பூர் டி.என்.எச்.பி. மகளிர் சுயஉதவிக்குழுவிற்கும், ரூ.8.00 இலட்சத்திற்கான வங்கி கடன் இணைப்பை பழைய வண்ணாரப்பேட்டை ரோஜா மகளிர் சுயஉதவிக்குழுவிற்கும், மொத்தம் ரூ.17 இலட்சத்திற்கான வங்கிக்கடன் இணைப்பு வழங்கி சிறப்பித்தார்கள்.

மாநில அளவிலான வங்கிகளுக்கான 2012–13 மற்றும் 2013–14ல் முதல் இடம் பிடித்த சேத்துப்பட்டு இந்தியன் வங்கி கிளை மைக்ரோசெட்–1க்கும், இரண்டாம் இடம் பிடித்த திருவான்மியூர் இந்தியன் வங்கி கிளை மைக்ரோசெட்–2க்கும் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் வழங்கி மாண்புமிகு மேயர் அவர்கள் வாழ்த்துகளை தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் மற்றும் ஆணையாளர் அவர்களின் தலைமையில், சென்னை மாநகராட்சியின் கல்வித்துறையால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக, பெரும்பாலான சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் நூறு சதவீத தேர்ச்சியை அடைந்து வருகிறது. மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள் 2015–2016ஆம் கல்வி ஆண்டில் சென்னைப் பள்ளிகளில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் நூறு சதவீதம் தேர்ச்சி காட்டிய 19 பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும், 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் நூறு சதவீதம் தேர்ச்சி காட்டிய 3 பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் தலா ரூ.1 இலட்சத்திற்கான காசோலை மற்றும் பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 25 ஆண்டுகள் எவ்வித குந்தகமின்றி மாசற்ற பணியினை நிறைவு செய்து பணிபுரிந்து வரும் 15 அலுவலர்கள்/பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் சான்றிதழ்களையும், பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறப்பாக பணியாற்றிய செயற்பொறியாளர்கள் மற்றும் வருவாய் துறை, சுகாதாரத்துறை, கல்வித்துறை, நிர்வாகத்துறை, மின்துறை, பொதுத்துறை, மருத்துவ சேவைகள் துறை, பூங்காத்துறை மற்றும் பல்வேறு துறைகளை சார்ந்த 85 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கினார்.

அதன் பின்னர், சென்னைப் பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளான, திருவான்மியூர் சென்னை மேல்நிலைப்பள்ளி, புலியூர்–1 சென்னை தொடக்கப்பள்ளி, விநாயகபுரம் சென்னை நடுநிலைப்பள்ளி, எம்.ஜி.ஆர். நகர்–2 சென்னை நடுநிலைப்பள்ளி, நுங்கம்பாக்கம் சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, வியாசர்பாடி சென்னை நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளை சார்ந்த மாணவ, மாணவியர்களின் நடனத்தையும் கண்டுகளித்து, அனைத்து மாணவ/மணவியர்களுக்கும் பரிசுகள் வழங்கி, பாராட்டுகளை தெரிவித்தார்.

பின்னர், அணிவகுப்பில் பங்குபெற்ற தேசிய மாணவர்படைகளில் சைதாப்பேட்டை சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு முதல் பரிசும், நுங்கம்பாக்கம் சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு இரண்டாம் பரிசும், சாரணர் அணிகளில் அம்மாயம்மாள் தெரு சென்னை உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு முதல் பரிசும், எம்.ஜி.ஆர். நகர்–2 சென்னை நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு இரண்டாம் பரிசும், சாரணியர் அணியில் புத்தா தெரு சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு முதல் பரிசும், புல்லா அவென்யூ சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு இரண்டாம் பரிசும் மாண்புமிகு மேயர் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்த சுதந்திர தின விழா நிகழ்ச்சியில், ஆணையாளர் முனைவர். தா. கார்த்திகேயன், இ.ஆ.ப. அவர்கள், துணை ஆணையர் (பணிகள்) திரு. கே.எஸ். கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையர் டாக்டர்.சுபோத்குமார், இ.ஆ.ப. அவர்கள், வடக்கு வட்டார துணை ஆணையர் திரு.பிரவீண் பி. நாயர், இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர்கள், நியமனக்குழு உறுப்பினர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/ மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**